பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 24 திங்கட்கிழமை 07.02.2022 கதிர் 320

## ஒன்றரை வயது குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதி

பதுளை, ஹப்புத்தளையில் ஒன்றரை வயது ஆண் குழந்தைக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பதுளை மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் சுப்பிரமணியம் சுதர்சன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பதுளை, ஹப்புத்தளையில் 28 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் 2

# தமிழக மீனவர்களின் 135 படகுகள் ஏலத்தில்!

## காரைநகரில் 52 லட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை





(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., காரைநகரில் வைத்து தமிழக மீனவர்களின் 135 படகுகள் இன்று ஏலத்தில் விடப்பட்டன. அவை 52 லட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களின் 135 ட்ரோலர் படகுகள் காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு தடுத்த வைத்திருந்த படகுகளே இன்று ஏலத்தில் விடப்பட்டன. 2

## பரீட்சைக்குத் தோற்றும் வெலிக்கடைக் கைதிகள்

வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைதிகள் இருவர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரு கைதிகளும் 43 மற்றும் 46 வயதுடையவர்கள் 2

## பள்ளமடு - விடத்தல்தீவு வீதியில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

### விபத்தா? கொலையா? எனப் பொலிஸார் தீவிர விசாரணை

(மன்னார் நிருபர்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளமடு - விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் இன்று காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சன்னார் கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது 33) என்பவரே சடலமாக மீட்கப்படுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் தனது வீட்டிலிருந்து நேற்று விடத்தல் தீவு கிராமத்துக்குச் சென்றுவிட்டு 2



## யாழ். பல்கலைக்கழக 2 மாணவிகள் மோதல்

### ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இரு மாணவிகள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர். 2

## புதையல் தோண்டிய 2 பேர் சிக்கினார்கள்

களுத்துறை, தெபுவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிச்சர் பெலஸ்வத்த பிரதேசத்தில் புதையல் தோண்டும் செயற்பாட்டில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கிரிவத்துகுடுவ, ஹோமாகம ஆகிய 2

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்குப் பிணை!

பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் புத்தளம் மேல் நீதிமன்றுக்கு பிணை 2



## சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது!

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஎலிய காட்டுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது. 2




## பருத்தித்துறை கடலில் மடக்கிப் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 21 தமிழக மீனவர்களினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி 2 படகுகளில் நுழைந்த 21 தமிழக மீனவர்களை வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்துத் தடுத்து வைத்திருந்தனர்.

வடமராட்சி மீனவர்களிடமிருந்து தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பொறுப்பெடுத்து, 21 தமிழக மீனவர்களையும் கைதுசெய்தனர்.

அன்றைய தினம் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மறுநாள் பெப்ரவரி முதலாம் திகதி 2

## யாழ். பல்கலைக்கழக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவி ஒருவரும், மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாடகை அறையில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில், கலைப் பீட மாணவி ஒருவர் அடிக்கடி தொலைபேசியில் பேசி வருகின்றமையால்தனதுகற்றலுக்குஇடையூ றாக இருக்கின்றது என மருத்துவபீட மாணவி பல தடவைகள் சொல்லிக் காட்டியுள்ளார்.

நேற்றிரவு கலைப்பீட மாணவி அதிக நேரம் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது மருத்துவபீட மாணவி இரண்டு, மூன்று தடவைகள் தனது கற்றலுக்கு இடையூறாக இருப்பதாகச் சுட்டிக் காட்டியபோதும், கலைப்பீட மாணவி அதனைப் பொருட்படுத்தவில்லை.

கோபமடைந்த மருத்துவபீட மாணவி தன்னுடைய தொலைபேசியைக் கலைப்பீட மாணவியின் முகத்தில் எறிந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் நண்பர்களின் தலையீட்டால் சமரசம் செய்யப்பட்டது. எனினும், இந்தத் தாக்குதலில் காயமடைந்த கலைப்பீட மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பள்ளமடு - விடத்தல்தீவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் திரும்பியுள்ளார்.

இந்தநிலையிலேகுறித்தகுடும்பஸ்தர் இன்று தகாலை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்துக்கு அருகில் இருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பொலிஸார் இது விபத்தா? அல்லது கொலையா? என்பது தொடர்பாகத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோதமாக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரத்தினபுரி, பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 50, 47 மற்றும் 32 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹிஜாஸ் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விண்ணப்பம் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அது அந்த நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

அவருக்குப் பிணை வழங்குவதற்கு இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து நீதிபதி குறித்த விண்ணப்பத்தை நிராகரித்தார்.

இந்நிலையில், இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்றுக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அவரது பிணைக் கோரிக்கையை ஆட்சேபிக்கப் போவதில்லை என்று சட்டமா அதிபர் அண்மையில் மன்றுக்குத் தெரியப்படுத்தி இருந்த நிலையில், அவருக்கு இன்று பிணை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டமைக்காக அவர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 18 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

## புதையல் தோண்டிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதேசங்களைச் சேர்ந்த 52 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்கான பொருள்கள், சந்தேகநபர்கள் பயணித்திய ஜீப்ரகவாகனம்,மூன்றுதொலைபேசிகள் என்பவற்றையும் பொலிஸார் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள் ளனர்

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பருத்தித்துறை கடலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை இன்று 7ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்நிலையில், குறித்த வழக்கு இன்று அழைக்கப்பட்டபோது , 21 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

## தமிழக மீனவர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இருந்து வருகை தந்த மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் இந்தப் படகுகள் ஏலத்தில் விடப்பட்டன.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமான ஏல விற்பனை பிற்பகல் 2 மணிக்கு நிறைவடைந்தது.

இதன்போது 135 படகுகளும் 52 லட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டன. இவற்றில் உச்சபட்சமாக ஒரு படகு 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேநேரம் காங்கேசன்துறையிலுள்ள தமிழக மீனவர்களின் 8 படகுகள் நாளை ஏலம் விடப்படவுள்ளன.

## ஒன்றரை வயது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிசோதனையில் குறித்த குழந்தை உள்ளிட்ட 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்தக் குழந்தை கொரோனா சிகிச்சை நிலையத்துக்குத் தாயுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழந்தை தவிர்ந்த ஏனைய 17 பேரும் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பதுளை மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் மேலும் கூறினார்.

## பரீட்சைக்குத் தோற்றும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மகசின் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் இவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு-
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## இன்று காரைநகரில் படகுகள் ஏலம்















# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டின் 'பயங்கர' சட்டம்

**இலங்கையின் மிகக்கொடூரமான சட்டத்தின் கீழ் சுமார் 22 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு, பல இன்னல்களை அனுபவித்த மனித உரிமை ஆர்வலரும் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணியுமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பிணையில் விடுவிக்கப்படுகிறார்.**

**மனித நாகரிகத்துக்கு – மனித குல பண்பியல் விழுமியங்களுக்கு – ஒத்துவராத காட்டுச் சட்டமே இலங்கையின் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என்பதை நிரூபிப்பதற்கு மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஸ்புல்லாவுக்கு நேர்ந்த கதி – அவலம் – நல்லதொரு முன்னுதாரணம். இலங்கை யின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கு மோசமான வகையில் முரணானது என்பதை உலகுக்குப் பறைசாற்றும் மனித உரிமைவாதியை, அந்தச் சட்டம் எப்படிக் கொடூரமாகக் கையாளும், அதற்கேற்ப மனிதாபிமானமற்ற குரூர ஏற்பாடுகளை அச்சட்டம் எப்படி கொண்டுள்ளது, ஆட்சியாளர்களின் காட்டுமிராண்டித்தனமான சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடமளிக்கும் வசதியான ஏற்பாடுகளை அது எப்படி கொண்டிருக்கின்றது என்பவற்றை சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் இந்த கைதும், தடுப்புக் காவலும், பிணை அனுமதிக்கான அலைச்சலும் நன்கு எடுத்தியம்பி நிற்கின்றன.**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கண்மூடித்தனமான முறையில் கைது செய்யப்படுபவர்களுக்கு நீதியான முறையில் பிணை வழங்கும் நியாயம் கூட இந்த சட்ட ஏற்பாடுகளில் ஒழுங்காக இல்லை என்பது இந்த வழக்கில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.**

**ஹிஜாஸை பிணையில் தன்னும் விடுவிக்க வேண்டும் என்ற கட்டாயம் அதிகார வர்க்கத்துக்கு ஏற்பட்ட பின்னர், அதைக் கூட அரசுத்தரப்பு முன்னெடுக்கக் கூடிய சட்ட தளர்வுகள் இல்லாமல், அசையாத இரும்புச் சட்டகமாக அது இறுக்கமாக இருந்ததை நாம் கண்டோம். அரசு தரப்பு ஹிஜாஸைப் பிணையில் விடுவிப்பதை ஆட்சேபிக்க மாட்டோம் என்று நீதிமன்றத்தில் தெரிவித்த பின்னரும், அந்தப் பிணை அனுமதியைப் பெற்றுக் கொள்ள மேல் நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் மாறிமாறி அலைய வேண்டியிருந் தது.**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவ லில் இருக்கும் கைதியைப் பிணையில் விட சட்டத்தில் தனக்கு அதிகாரம் ஏதும் இல்லை என்றது மேல் நீதிமன்றம். அதேபோல சட்டத்தின் மூலம் பிணையில் விடுவிப்பதற்கு அதிகாரம் ஏதும் இச்சட்டத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்படாவிட்டாலும், பிணை வழங்குவதைத் தடைசெய்யும் ஏற்பாடு எதுவும் கூட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சட்டத்தினால் விதிக்கப்படவில்லை என்பதைக் காட்டி, அதுவும் ஹிஜாஸை பிணையில் விடுவிப்பதற்கு அரசு தரப்பில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காத பின்னணியில் – அந்தப் பிணை அனுமதியை வழங்குவதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்து, அதற்கான உத்தரவை விடுத்தது.**

**சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐ.நா., அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் எனப் பல தரப்புக்க ளும் ஹிஜாஸ் மனித உரிமைகள் முக்கியஸ்தர் என்ற அடிப்படையில் தலையிட்டு, கடும் அழுத்தம் கொடுத்தமையினால்தான் 22 மாதங்களில் பின்னராவது ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் வெளியே வர அனுமதி கிடைத்தது.**

**ஜெனிவாவில் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடருக்கு முன்னதாக ஹிஜாஸ் பிணையில் வெளியே வர அனுமதிக்காவிட்டால் கொழும்பு ஆட்சிப்பீடம் ஜெனிவாவில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் என்ற இக்கட்டு – அழுத்தம் – இருந்தமையால், இப்போதாவது வெளியில் வரக்கூடிய நிலைமை அவருக்குக் கிட்டியது.**

**ஆனால், இத்தகைய வாய்ப்பான – சாதகமான – அம்சங்கள் ஏதும் இன்றி 22 வருடங்களுக்கு மேல் தடுப்புக்காவலில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் எந்த வெளிச்சமும் அவர்களுக்குக் கிட்டப் போவதில்லை. அவர்கள் தடுப்புக்காவலில் இருண்ட சுவர்களின் பின்னால் தமது வாழ்வை முடித்து அழித்துக் கொள்ள வேண்டியதுதான் என்பதே அவர்களின் தலையெழுத்தாக நீடிக்கிறது. இந்தக் கொடூரச் சட்டத்தின் துரதிஷ்டம் அதுதான்.**

# தமிழ்த் தரப்பு இந்தியாவை நாட அரசாங்கமே காரணம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரிணி அமரசூரிய தெரிவிப்பு



தேசிய பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வுகளை வழங்காமையின் காரணமாகவே தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவை நாடி தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் இந்தியா அனைத்து சந்தர்ப்பங்களில் அதன் தேவைக்கு ஏற்பவே செயற்படும். மாறாக இலங்கையின் நன்மையைக் கருத்திற் கொண்டு செயற்படாது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் தெரிவித்தவை வருமாறு –

இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றபோது சர்வதேச தலையீடுகள் காணப்பட்டமை இரகசியமல்ல. இலங்கையின் அரச தலைவர்களே அவ்வாறான தலையீடுகளுக்கு வாய்ப்பளித்துள்ளனர்.

சர்வதேச தரப்பினர் ஒவ்வொருவரையும் பற்றிக்கொண்டு எவ்வாறு பயனைப் பெற்றுக்கொள்வது என்பதே எமது வெளிநாட்டு கொள்கையாகக் காணப்படுகிறது. தேசிய சொத்துக்களை விற்றாவது சர்வதேசத்தை திருப்திப்படுத்தி தற்காலிக தீர்வைப் பெற்றுக் கொள்வதே தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கையாகவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் போது நிச்சயம் சர்வதேச தலையீடுகள் காணப்படும். தற்போது வெளியுறவுகள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியா சென்றுள்ளார். அதற்கு முன்னர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியா சென்றார். அரசாங்கத்தால் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படாதபோது, தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றுக்குக் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், நீண்ட காலமாக அதற்கான வாய்ப்பளிக்கப்படாத நிலையில், அவர்கள் மாற்று வழியில் தீர்வுகளைக் காண வேண்டிய நிலைமைக்கும் தள்ளப்படுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களிலும் இதுவே இடம்பெற்றுள்ளது. - என்றும் அவர் கூறினார்.

# நாட்டில் மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தைப்பெற முயற்சிக்காதீர்!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோரிக்கை



மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தை பெற முயற்சிக்காதீர்கள் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பல் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எரிவாயு பிரச்சினைக்கு பின்னால் யாரோ இருப்பதாக சொன்னேன். அப்போது நிறைய பேர் என்னை விமர்சித்தார்கள்.

இப்போது எரிவாயு வெடிப்பதை பார்த்திருக்கிறீர்களா? முகநூலில் உள்ள அனைத்து ஜே.வி.பிகாரர்களும் என்னைக் குற்றம் சாட்டத் தொடங்கினர்.

கெட்ட வார்த்தையில் அவர்கள் என்னை ஏசினார்கள். முகநூல் ஊடாக ஜேவிபியின் ஒழுக்கத்தை நீங்கள் நன்றாகக் கவனிக்கலாம்.

மின்சாரத்திலும் இதேபோன்ற பிரச்சினை உள்ளது. மாதக்கணக்கில் மூடப்படுகிறது. இந்த மின் நெருக்கடிக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பதை மக்கள் உணரவில்லையா? இதன் பின்னணியில் சதி உள்ளது. ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இடமளிப்பதில்லை. இந்த விடயங்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது.

எரிவாயு வெடிப்பு விவகாரம் வெளியில் வந்தது போன்று இந்த விடயங்களும் எதிர்காலத்தில் வெளிச்சத்துக்கு வரும்.

நமது ஜனாதிபதி இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகிறார். பொலிஸார் சாமர்த்தியமாக அவற்றையெல்லாம் பறைசாற்றாமல் அம்பலப்படுத்துவர்.

இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் எனத் தொழிற்சங்கங்களுக்குக் கூறுகின்றோம். இதன் பின்னணியில் முழுமையாக சூழ்ச்சி காணப்படுகிறது.

நாங்கள் தேர்தலை எதிர்கொண்டு மக்களின் விருப்பத்துக்கு இடமளிப்போம். மக்களைக் கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்காதீர்கள்.

மின்சாரத்தைத் துண்டித்து அதிகாரத்தை பெற முயற்சிக்காதீர்கள்.

அவை தவறான செயல்களாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்தில் தலைவராக சைவப்புலவர் சி.கா.கமலநாதனும், செயலாளராக சைவப்புலவர் செ.த.குமரனும், தேர்வுச்செயலாளராக சைவப்புலவர் கந்தசத்தியதாசனும் பொருளாளராக சைவப்புலவர் ச. முகுந்தனும் உபதலைவர்களாக சைவப்புலவர் வ.தயாபரசிவம், சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், சைவப்புலவர் திருமதி சிவானந்தஜோதிஞானசூரியம், சைவப்புலவர் சா.பொன்னுத்துரை ஆகியோரும் உபசெயலாளர்களாக சைவப்புலவர் செ.பரமேஸ்வரன், சைவப்புலவர் பொ. சந்திரவேல், உபதேர்வுச் செயலாளர்களாக சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி, சைவப்புலவர் திருமதி லீலாவதி அருளையா ஆகியோரும் பிரசாரச் செயலாளர்களாக சைவப்புலவர் திருமதி கவிதா கதிரமலை, சைவப்புலவர் ஜீவன் பிரசான், சைவப்புலவர் பாலன் சுதாகரன், சைவப்புலவர் யோ.கஜேந்திரா, சைவப்புலவர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் நிர்வாகசபை உறுப்பினர்களாக சைவப் புலவர் சி.நந்தகுமார் சைவப்புலவர் திருமதி ருத்திராதேவி பகீரதன், சைவப்புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம், சைவப்புலவர் சு.சிவரூபன், சைவப்புலவர் சு.தேவமனோகரன், சைவப்புலவர் வ.உதயசங்கர் ஆகியோரும் பேசகராக சைவப்புலவர் செ.நவநீதகுமார் உள்ளகக்கணக்காய்வாளராகசைவப்புலவர் சி.நந்தகுமார் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உருகும் எவரெஸ்ட் சிகரம்



புவி வெப்பமயமாதலால் எவரஸ்ட் சிகரம் உருகி வருவதாக ஆய்வு தகவல் அளித்துள்ளது.

உலகம் முழுவதும் தற்போது புவி வெப்பமயமாதல் அதிகரித்து வருகிறது. இதனை அடுத்து உலகின் உயரிய சிகரங்களில் உயரம் குறைந்து வருவதும் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் அதிகரிப்பதும் வாடிக்கை யாகிவிட்டது.

முன்னதாக அண்டார்டிகாவில் ராட்சத மலை ஒன்று இரண்டாகப் பிளந்து தனி யாக கடல் பரப்பின்மீது மிதந்தது குறிப் பிடத்தக்கது. இதேபோல தற்போது நேபாளத்தில் உள்ள உலகின் உயரமான சிகரமான எவரெஸ்ட் தற்போது அதிக வெப்பம் காரணமாக உயரம் குறைந்து வருவதாக ஆய்வு ஒன்று தகவல் அளித் துள்ளது.

கடந்த 25 ஆண்டுகளாக எவரெஸ்ட் ம லையின் தெற்கு பகுதியில் 150 அடி உய ரம் குறைந்துள்ளதாக மைன் பல் கலைக்கழக ஆராய்ச்சி கூறுகிறது. எவரெஸ்ட் மலையின் மேலடுக்கு 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. இந்த பகுதி உருவானதைவிட 9 மடங்கு வேக மாக தற்போது குறைந்து வருகிறது.

மேலும் அதிகரித்து வரும் தொழிற் சாலை, வாகன புகை காரணமாக காற்று மாசு ஏற்பட்டு இதுபோன்ற இயற்கை அச்சுறுத்தல் உண்டாவது வாடிக்கையாகி விட்டது. இதே நிலை தொடர்ந்து நீடித்தால் சவுத் கோல் எனப்படும் இப்பகுதி இன்னும் சில ஆண்டுகளில் இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானி பால் மாயாஸ்கி எச்சரித்துள்ளார்.

கடல் மட்டத்திலிருந்து 20 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள இப்பகுதியில் மழை மே லடுக்கு உயரம் கணிசமாக குறைவது இயற்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தும். அதீத வெப்பம் காரணமாக உருகும் இந்த மேல் படலம் தண்ணீராக மாறி மலை உச்சி யிலிருந்து ஆறாக உருவாகி மலையின் கீழ் உள்ள கிராமங்களில் ஓடுகின்றன.

சமீப காலத்தில் இதுபோன்ற உருவாகி யிருக்கும் ஆறுகளில் எண்ணிக்கை அதி கரித்துள்ளதாக நேபாள கிராம மக்கள் கூறியுள்ளனர். சில சமயங்களில் இந்த ஆறுகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு கிராமங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பும் உள்ளது. மனிதர்களின் செயல் களால் இயற்கை தொடர்ந்து இதுபோன்ற பாதிப்பை சந்தித்து வருவது குறிப்பிடத் தக்கது



## நேட்டோ விரிவாக்கத்தை எதிர்க்க ரஷ்யாவுடன் கைகோர்த்தது சீனா

மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கு மத்தியில் இருநாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட சீனாவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளன.

குளிர்கால ஒலிம்பிக்கிற் கான விளாடிமிர் புடின் விஜ யத்தின்போது பல சிக்கல்கள் குறித்த அவர்கள் பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேற் கத்திய சக்திகள் ரஷ்யாவை குறைமதிப்பிற்கு உட்படுத்த நேட்டோ பாதுகாப்பு கூட் ட ணியை பயன்படுத்துவதாக விளாடிமிர் புடின் குற்றம் சாட்டி யுள்ளார்.

ரஷ்யர்களும் உக்ரைனியர் களும் ஒரே நாட்டவர்கள் என தெரிவிக்கும் புடின் எல்லையில் சுமார் 100,000 ரஷ்ய துருப்புக் களை களமிறங்கியுள்ளது.

இந்நிலையில் இரு நாடுக ளும் வெளியிட்ட கூட்டறிக்கை, உக்ரைனை நேரடியாகக் குறிப்பிடவில்லை என்றாலும், நேட்டோ ஒரு பனிப்போர் சித் தாந்தத்தை ஆதரிப்பதாக குற் றம் சாட்டியுள்ளன.

இதேவேளை அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரே லியா இடையேயான அவ்க்கஸ் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக இரு நாடுகளும் கவலை வெளியிட்டுள்ளன.

ஆசியா-பசிபிக் பிராந்தியத் தில் பாதுகாப்பை அதிகரிக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக அணுசக்தியால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களை உருவாக் கும் குறித்த ஒப்பந்தத்தை ஆஸ் திரேலியா கடந்த ஆண்டு அறி வித்தது. தென் சீனக் கடல் போன்ற சச்சைக்குரிய பிரதேசங் களில் பதற்றத்தை அதிகரிப்ப தாகக் குற்றம் சாட்டப்பட்ட சீனாவை எதிர்கொள்ளும் முயற்சியாக இந்த ஒப்பந்தம் பார்க்கப்படு கிறமை குறிப்பிடத்தக்கது.

## சிகரெட் துண்டுகளை சேகரிக்கும் பணியை தொடங்கும் காகங்கள்



ஒவ்வொரு ஆண்டும் உலக ளவில் 2 பில்லியன் தொன்களுக் கும் அதிகமான கழிவுகள் உற் பத்தி செய்யப்படுகின்றன.

இப்படியாக நாளுக்கு நாள் பெருகி கொண்டே போகும் கழிவுகளில் ஒரு சிறிய பங்களிப்பு தான்-சிகரெட் துண்டுகள்.

இந்நிலைப்பாட்டில் இதே சிக ரெட் கழிவுகள் சமாச்சாரத்தின் கீழ், ஒரு ஸ்வீடிஷ் நிறுவனத்தின் செயல் இணையத்தில் மிகவும் ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது அந்த வீடியோ வைரல் ஆகிவருகி றது. சிகெரெட் துண்டுகளை குறிப்பிட்ட இடத்தில் உள்ள மெஷினில் காகங்கள் எடுத்து வந்து போடும். ஒவ்வொரு சிகரெட் துண்டுக்கும், சில நிலநடுக் கடலைகள் அவற்றுக்கு பரிசாக வழங்கப்படும்.

குறைந்த விலையில் தெருக்களை தூய்மைப் படுத்த கார்விட் க்ளீனிங் என்ற நிறுவனம் இம் முயற்சியை எடுத்துள்ளது. அதிகரித்துக் கொண்டே போகும் சிகரெட் கழிவுகள் சார்ந்த சிக்கலை சமா ளிப்பதற்கும், தெருக்களில் வீசப்பட்ட சிகரெட் துண் டுகளை சேகரிப்பதற்கும் இந்த ஸ்வீடிஷ் நிறு வனம் ஒரு வழியை கண்டறிந்து உள்ளது.

இந்த ஸ்டார்ட்-அப் நிறுவனத்தின் செயல் பெரிய அளவிலான கவனத்தை பெற காரணம், நிறுவனம் நிர்ணயித்த இலக்கால் அல்ல, அதை அடைய அவர்கள் முயற்சிக்கும் விதத்தால்!

இந்த பயிற்சி ஒரு படிப்படியான செயல்முறை யாக இருக்கும், பின்னர் முழுமையாக பயிற்சி பெற்ற சில காகங்கள், ஸ்வீடன் நாட்டின் சோடெர் டால்ஜி நகரில் சிகரெட் துண்டு களை சேகரிக்கும் பணியை தொடங்கும்.

## பெருவியன் பிரதமர் வேலர் பதவியை 4 நாள்களில் துறப்பு

பெருவியன் பிரதமர் ஹெக்டர் வேலர், தனது மகளையும் மறைந்த மனைவியையும் அடித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர், பதவிக்கு பெயரிடப்பட்ட நான்கு நாட்களுக்குப் பிறகு தான் பதவி விலகுகிறார் என உறுதிப்படுத்தினார்.

வாலரை பிரதமராக நியமித்ததற்கு பரவலான கண்டனங்களுக்கு மத்தியில், கடந்த வெள்ளிக் கிழமை ஜனாதிபதி பெட்ரோ காஸ்டிலோ, மூன்று நாள்களுக்குப் பிறகு மீண்டும் அமைச்ச ரவையை மாற்றிய மைப்பதாகக் கூறி னார். இந்த நிலை யில், ஹெக்டர் வேலர் தனது பதவியை இராஜினாமாச் செய் துள்ளார்.



சண்டையிடும் மொழியைப் பயன் படுத்தி, குடும்ப வன்முறையின் தவறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தனது இராஜினாமாவை கட்டாயப்படுத்தி யதாக வேலர் அரசியல் உரிமையைக் குற்றம் சாட்டினார்.

'தனக்கு எதிரான முறைப்பாடு பொய் களை அடிப்படையாகக் கொண்டவை' என்று அவர் கோபமாக கூறினார்.

வேலரின் நியமனம் முடிந்த சில மணி நேரங்களுக்குப்பிறகு, 2016ஆம் ஆண்டிலிருந்து பொலிஸ் அறிக்கைகள் வெளிவந்தன. அதில் அவரது மகளும் மறைந்த மனைவியும் பாலின வன்முறையில் அவர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

அவரது 29 வயது மகள் தாக்கல் செய்த முறைப்பாடு 'அவரை அறைந்தார், குத்தினார் மற் றும் உதைத்தார்' மற்றும் அவரது தலைமுடியை இழுத்தார் என வேலர் மீது குற்றம் சாட்டப்பட்டுள் ளது. வலேர் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார் மற்றும் அறிக்கைகள் போலியானவை என்று கூறினார்.

பெருவியன் அரசமைப்பின் கீழ், பிரதமர் பதவி விலகும் போது, ஒரு மாற்று நியமனம் மற் றும் ஒரு புதிய அமைச்சர் குழு தேர்ந்தெடுக்கப்படும் வரை முழு அமைச்சரவையும் பின்பற்ற வேண் டும். வேலரின் நியமனத்திற்கு எதிராகப் பெண்கள் உரிமைக் குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்தன.

# பட்டிப்பளை பிரதேசத்திற்கு குடிதண்ணீர் ரூ. ஆறரைக் கோடி திட்டம் தொடங்கியது

## ஆரம்பித்துவைத்தார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு,பெப்.07

மட்டக்களப்பு மாவட்டத்தின், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, முதலைக்குடா மற்றும் அம்பிளாந்துறை ஆகிய பகுதிகளுக்கான குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இரண்டு பகுதிகளுக்கான குடி தண்ணீர் இணைப்பை வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வுகளே நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இவ்விரு கிராமங்களிலும்இந்தஅபிவிருத்தி திட்டத்தின் ஊடாக சுமார் 750 குடும்பங்கள் பயனடைய வுள்ளன.இதற்காக இராஜாங்க அமைச்சரின் சிபாரிசின் அடிப்படையில் சுமார் ஆறரைக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.புஸ்பலிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள், நீர் வழங்கல் அதிகார சபையின் அதிகாரிகள், ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# 1,400 கிலோ மாபெரும் காளிஅம்பாள் விக்ரகம் குமன சரணாலயத்தில் குமுக்கனில் பிரதிஷ்டை

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

ஆயிரத்து நானூறு கிலோ எடையுள்ள மாபெரும் காள. அம்பாள் விக்ரகமொன்று கிழக்கின் தென் எல்லையிலுள்ள குமுக்கன் ஆற்றுப் படுக்கையிலுள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் ஆலய வளாகத்தில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டுள்ளது.

குமண சரணாலயத்தில் மாபெரும் சக்தி பீடமாக விளங்குகின்ற குமுக்கன் ஆற்றங்கரையின் மடத்தடி அம்மன் ஆலயத்தில், இந்த மாபெரும் காளி தேவியின் விக்ரக பிரதிஷ்டை வன அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பில், அவர்களின் நேரடி வழிகாட்டலில், மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'சித்தர்களின் குரல்' அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ இதனை முன்னின்று செயற்பட்டு இதனைப் பிரதிஷ்டை செய்துவைத்தார்.

உதவியாக 'இலங்கையின் சித்தர்களின் குரல்' அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், சிவயோகி மகேஸ்வரன் ஸ்வாமிகள் உள்ளிட்ட பக்தர்கள் செயற்பட்டனர்.

'சித்தர்களின் குரல்' அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ கருத்துரைக் கையில்-

விக்ரமாதித்தன் பூஜித்த உச்சயினி பிரதேசத்தில் இருந்து கல்லைத் தெரிவு செய்து அதை சாமுத்ரிகா லட்சணங்களுடனும் 1,400 கிலோ எடையுள்ள மாபெரும் மஹா காளியாக வடிவமைத்து உயிர் கொடுத்த என் அன்புக்குரிய உலகம் அறிந்த மயன் வம்சத்தில் வந்த சிற்ப ஆச்சரியார் கலைமாமணி முத்தையா ஸ்தபதி அவர்களுக்கு நன்றிகள். உலகம் உள்ளவரை அவர் உருவாக்கிய இந்த அபூர்வ படைப்பு அவரின் பெயரைச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

அன்னை வாலைத்தாயின் பேரருளால் அனைத்து வித சிரமங்கள், இடர்களை தாண்டி பிரதிஷ்டை நடைபெற்றது. மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் மற்றும் வன பாதுகாப்பு துறை அதிகாரிகள் அனைவருக்கும் என் நன்றிகள். - என்றார்.

# கைக்குண்டுடன் அகப்பட்ட திருடனை பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி

## மட்டக்களப்பு நீதிவான் வழங்கினார்

பல வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டவரை மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய மட்டக்களப்பு நீதிவான் அனுமதி வழங்கினார். காத்தான்குடி பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் பல வீடுகள் உடைக்கப்பட்டு தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்டுவந்த விசாரணையில் கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி கர்பலா பிரதேசத்தில் சந்தேகத்தில் ஒருவரை கைக்குண்டுடன் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் காளிகோவில் வீதி செல்வநகரைச் சேர்ந்தவர் எனவும், இவர் கடந்த வருடம் காத்தான்குடியில் இடம்பெற்ற பல திருட்டுச்சம்பவங்களுடன்தொடர்புடையவர் எனவும் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர் மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை இன்று 7 ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிவான் அனுமதி அளித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் துமிந்த நயனசிறியின் வழிகாட்டலுக்கமைய, குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் வை. விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சந்தேக நபரைக் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழா ஆரம்பம்








இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் 14 ஆவது பொது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் இன்று திங்கட் கிழமை சிறப்பாக ஆரம்பமாகியது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் தலைமையில் இன்று சம்பிரதாய பூர்வ ஆலவட்ட நிகழ்வுடன் ஊர்வலமாக ஆரம்பமாகியுள்ள பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு எட்டு அமர்வுகளாக பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன:

இந்தப் பொதுப்பட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 2 ஆயிரத்து 621 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முதலாம் அமர்வில் பிரயோக விஞ்ஞானம், பொறியியல் பீடத்தினைச் சேர்ந்த 475 பேரும், 2 ஆம், 3ஆம் அமர்வுகளில் கலைப்பீடத்தைச் சேர்ந்த முறையே 219 பேர் மற்றும் 348 பேரும், 4 ஆம், 5ஆம் அமர்வுகளில் இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி பீடத்தைச் சேர்ந்த முறையே 329 பேர் மற்றும் 313 பேரும், 6ஆம், 7 ஆம் அமர்வுகளில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த முறையே 277 பேர் மற்றும் 348 பேரும், 8 ஆம் அமர்வில் கலை, கலாச்சார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர். அத்துடன், 4 பேர் முதுதத்துவமாணிப் பட்டங்களையும், 23 பேர. வியாபார நிருவாக முதுமாணிப் பட்டங்களையும், 2 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெறவுள்ளனர்.

இதேவேளை இப்பொதுப்பட்டமளிப்பு விழாவில், பேராதனை பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் ஜெளபர் சாதிக் ஆகிய இருவருக்கும் கௌரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விழாவில் முதல் நாள் நிகழ்வில் இணையவழி ஊடாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஏனைய அதிதிகளான உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, றுகுணு பல்கலைக்கழக பேராசிரியர் காமினி சேனனாயக்க (முன்னாள் உபவேந்தர்) ஆகியோரின் சிறப்புரைகளும் அடுத்த நாள் நிகழ்வுகளில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விழாவிற்கு வருகை தரும் பட்டம்பெறும் மாணவர்கள் குறைந்த அளவு குடும்ப உறுப்பினர்களுடன் வருகை தருமாறும், அனுமதி அட்டை, கொவிட்தடுப்பூசி அட்டைஎன்பவற்றுடன் வருகை தருவோர் மட்டுமே பட்டமளிப்பு விழாவளாகத்திற்குள் அனுமதிக்கப் படுவரெனவும் அறிவுறுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியாவுடன் இணைக்க முயற்சி?



## சாள்ஸ் நிர்மலநாதன் எச்சரிக்கை

அநுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கமுயற்சிமேற்கொள்ளப்படும் நிலையில் அதற்கான அனுமதி கோரிய பத்திரம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஈரப்பெரிய குளத்திலுள்ள மண்டபமொன்றில் சிரதம்பரபுரம், கோமரசன்குளம், மதுராநகர் கிராம மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

பொருளாதார நெருக்கடிகளால் ஒப்பந்தக்காரர்கள் தாம் எடுத்த ஒப்பந்தங்களை முடிவுறுத்த முடியாதுள்ளனர். இவற்றுக்கு சீமெந்து பொருள்களின் விலையேற்றம் உட்படக்கட்டப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக உள்ளது.

அத்துடன் மக்கள் யுத்த காலத்தைப் போன்றுபெரும்இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதற்கு நாட்டின் ஜனாதிபதியும், அமைச்சரவையும் எடுக்கும் தவறான கொள்கையே காரணமாக இருக்கின்றது. இதனால் மக்கள் மிகப் பெரும்சவாலானவாழ்க்கைக்கு உட்பட்டிருக் கின்றனர்.

2015 இல் இருந்து 2019 வரையும் வடக்கு கிழக்கில் இடம்பெறவிருந்த சிங்கள குடியேற்றங்களை நாம் தடுத்து நிறுத்தியிருந்தோம். எனினும் 2019 நவம்பர் மாதத்துக்குப் பிற்பாடு வட மாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவில் தென் பகுதியில் இருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டு வருகின்றனர். வடக்கில் தமிழர்களின் விகிதாரசாரத்தை மாற்றியமைப்பதற்காக இது மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்த குடியேற்றத்தை இரண்டு வகையாக மேற்கொள்கின்றனர்.

அதாவது இங்குள்ள அரச காணிகளில் தென்பகுதியில் இருந்து கொண்டு வந்து குடியேற்றுகின்றமை,மற்றையது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு அநுராதபுரம் மாவட்டத்துடன் உள்ளகிராமங்களைவவுனியா மாவட்டத்துடன் இணைப்பதாக உள்ளது.

அண்மையில் போகஸ்வெள கிராமத்துக்கு ஜனாதிபதி வந்தபோது திட்டமிட்டு கெப்பிட்டிகொல்லாவையில் உள்ள கிராமத்தில் இருந்து அநுராதபுரத்துக்குச் செல்வது கடினம் எனவும் வவுனியா நகரத்துக்குச் செல்வது இலகு என்பதால் தமது கிராமங்களை வவுனியாவுடன் இணைத்து விடுமாறு பிரதேசசபை உறுப்பினரொருவரால் கூறப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் அண்மையில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அநுராதபுரம் கெப்பிட்டிகொலாவ பிரதேச செயலகத்தின் கனகவெள என்ற கிராம சேவகர் பிரிவையும் பதவிய பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கம்பெலிய என்ற கிராம சேவகர் பிரிவையும் முழுமையாக வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக நாம் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்து வருகின்றோம்.- எனத் தெரிவித்துள்ளார்.

# ஹர்ஷன எம்.பிக்கும் கொரோனா உறுதி!



நாடாளுமன்றஉறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவிற்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் உள்ளிட்ட குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்து மரக்கறிகளால் விலையில் ஏற்பட்ட மாற்றங்கள்



யாழ்ப்பாணத்தின் பீட்ரூட் மரக்கறி தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கிடைத்துள்ளதை அடுத்து அதன் விலை சுமார் 100 ரூபா குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலை யத்தில் ஒரு கிலோ கிராம் பீட் ரூட்டின் மொத்த விற்பனை 350 ரூபாவாக இருந்த துடன் அது தற்போது 250 ரூபாவாகக் குறைந்துள்ளது.

இதனுடன் பொருளாதார மத்தியநிலையத்துக்குஏனைய மரக்கறிகளின் வரவு அதிகரித்துள்ளதால், அவற்றின் விலைகளும் 40 வீதத்தால் குறைந்துள்ளன.

கடந்த மாதத்தில் வேகமாக அதிகரித்து காணப்பட்ட மரக்கறிகளின்விலைகள்கிலோவுக்கு 50 ரூபா முதல் 100 ரூபா வரை குறைந்துள்ளன. பீட்ரூட் இந்த விலை மட்டத்தில் இருக்குமாயின் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும்.

யாழ்ப்பாணத்தில் பீட்ரூட் அறுவடை செய்யப்படும் நேரத்தில் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு இரகசியமாக பீட்ரூட் கொண்டு வரப்படுவதை நிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மயிலிட்டி பகுதியில் விபத்து ஒருவர் வைத்தியசாலையில்!

மயிலிட்டி பகுதியில் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

துறைமுக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இந்த விபத்தில் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வீட்டுக்குள் புகுந்து சாவி எடுத்து வாகனத்தைக் களவாடிய திருடன்

நிட்டம்புவை பஸ்யாலை பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடொன்றுக்குள் புகுந்த திருடன் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான பெஜிரோ வாகனத்தைத் திருடிச் சென்றுள்ளார் என நிட்டம்புவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிட்டம்புவை நகரில் வாகன விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளரது வாகனமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டின் ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்துள்ள திருடன், சாவிகள் மாட்டி வைக்கும் இடத்தில் இருந்து வாகனத்தில் சாவியை எடுத்து, பெஜிரோவை திருடிச் சென்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. திருட்டு நடந்த நேரத்தில் வீட்டில் இருந்தவர்கள் உறங்கியுள்ளனர். பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ள காட்சியின்படி சந்தேக நபர் கொழும்பு - கண்டி பிரதான வீதி ஊடாக கொழும்பு திசை நோக்கி வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார்.

# நாட்டில் மூன்று இடங்களில் எரிவாயு அடுப்புகள் வெடிப்பு






## பொலிஸார் தீவிர விசாரணை

நாட்டில் சமீப காலமாக எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் நேற்று மூன்று இடங்களில் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

**வவுனியா**

வவுனியா கூமாங்குளம் இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் சமைத்துக் கொண்டிருந்த போது எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை திடீரென எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு சொந்தமான 12.5 கிலோ எடை கொண்ட சிலிண்டர் பயன்படுத்தப்பட்டது.

உயிர்சேதம்எதுவும்ஏற்படவில்லை. இதனையடுத்து வீட்டார் எரிவாயு கொள்கலனை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதை தடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட மட்டிக்கழி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று காலை எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளது. மட்டிக்கழி பிரதான வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளது.

நேற்று காலை உணவுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது அடுப்பு வெடித்து சிதறியுள்ளதாக இந்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பகுதியிலும்நேற்று எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2022இல் வெளியிடப்பெற்றது.